பக்கங்கள் 6 விலை சதம் 40

# ஈழநாடு
The EELA NADU

சுடர் 19 ஐப்பசி 3 ஜுல்ஹஜ் 6 இதழ் 278
யாழ்ப்பாணம் வெள்ளிக்கிழமை 18-11-77

கருணாநிதியை விடுவிக்கக் கோரி

# இந்தியப் பிரதமருக்கு அமிர்தலிங்கம் தந்தி

(கொழும்பு)
காவலில் வைக்கப்பட்டுள்ள தமிழ் நாடு முன்னாள் முதலமைச்சர் திரு. மு. கருணாநிதியை விடுதலை செய்யும்படி வற்புறுத்தி தமிழர் விடுதலைக் கூட்டணி செயல் அதிபர்களில் ஒருவரும், எதிர்க்கட்சித் தலைவருமான திரு. அ. அமிர்தலிங்கம் இந்திய பிரதம மந்திரி திரு. மொரார்ஜி தேசாய்க்குத் தந்தியனுப்பியிருக்கிறார்.

தமிழ் நாட்டில் ஜனநாயகக் கோட்பாடுகளை நிலைநிறுத்தும் படியும் கறுப்புக்கொடி ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்ட தலைவர்கள் தொடர்ந்தும் காவலில் வைக்கப்பட்டிருப்பது குறித்து இலங்கை தமிழ் மக்கள் பெரிதும் கவலை கொண்டிருக்கிறார்கள் என்றும் இதில் தலையிட்டு, கலைஞர் கருணாநிதி உட்பட ஏனைய தலைவர்களையும் விடுதலை செய்யும்படியும் திரு. அமிர்தலிங்கம் கேட்டிருக்கிறார்.

(6-ம் பக்கம் பார்க்க)

ரூ. 300 க்குள் வருமானம் பெறும்

# 5 பேர் உள்ள குடும்பங்களுக்கு தொடர்ந்து பங்கீட்டு அரிசி

## கூ. ச. கடைகளில் மேலதிக அரிசி தாராளமாககிடைக்கும்

### விலைகூட்டி விற்போருக்கு கடும் எச்சரிக்கை

[கொழும்பு]

பங்கீட்டு முறையில் மாற்றம்செய்யப்படுவதனால் அரிசிவிலை ஏற்றமும் தட்டுப்பாடும் ஏற்படும் என்று பாவனையாளர்கள் அஞ்சத்தேவையில்லை.

கூட்டுறவுக் கடைகள் மூலம் அரிசியைத் தாராளமாக விற்பனைசெய்வதற்கு அரசு ஏற்பாடுகள் செய்கின்றது.

பங்கீட்டுக்கு வழங்கப்படும் அரிசிக்குப் புறம்பாக ஒரு றாத்தல் ஒரு ரூபா நாற்பத்தைந்து சதவீதம் அரிசியைக் கூட்டுறவுக்கடைகளில் பாவனையாளர்கள் பெற்றுக்கொள்ளலாம்.

இதேசமயம் மாதவருமானம் 300 ரூபாவுக்கு குறைவாகவுள்ள 5 பேர் கொண்ட குடும்பங்களுக்கு பங்கீட்டுப்பொருட்கள் தொடர்ந்து கிடைக்கவும் ஏற்பாடுகள் செய்யப்படுகின்றது.

பங்கீட்டுக்கு இலவசமாக ஒரு றாத்தல் அரிசியும் றாத்தல் ஒரு ரூபா வீதம் 3 றாத்தல் அரிசியும் பெற்றுக்கொள்ளும் பாவனையாளர்கள் இதற்குப் புறம்பாக றாத்தல் 1 ரூபா 45 சதம் வீதம் மேலதிகமாகவும் அரிசியைக் கூட்டுறவுக் கடைகளில் பெற்றுக்கொள்ள வசதிசெய்யப்படுகின்றது. இதேசமயம் கட்டுப்பாடின்றி 60 சதத்துக்கு மாவைத் தாராளமாகப் பெற்றுக்கொள்ளவும் வசதிசெய்யப்படுகின்றது.

செத்தல்மிளகாயைக் கூட்டுறவு கடைகள் மூலம் விநியோகிக்கவும் ஏற்பாடுசெய்யப்படுகின்றது.

டிசம்பர், ஜனவரி மாதங்களில் மக்களுக்கு தேவைப்படும் புடவைகளை இறக்குமதி செய்யவும் ஏற்பாடுசெய்யப்பட்டுள்ளது.

**எச்சரிக்கை**

அரிசி புடவை, வெங்காயம் போன்ற பொருட்களின் விலைகளை சில கடைக்காரர்கள் கூட்டிவிற்க முற்படுவதாகவும் கொள்ளைலாபத்தை நோக்கமாகக்கொண்ட இவர்கள் மீது கடும்நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் அரசாங்க அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

ஒரு குடும்பத்தில் 5 பேர் இருப்பார்களானால், அவர்களின் வருமானம் 300 ரூபாய்க்கும் குறைவாகவிருக்கும்பட்சத்தில் பங்கீட்டுபொருட்கள் தொடர்ந்தும் அவர்களுக்குக் கிடைக்கும் என்று அதிகாரி ஒருவர் கூறினார். மேற்படி ஐந்து பேரின் வருமானமும் கணக்கில் எடுக்கப்படும். பிள்ளைகள் மனைவி, ஆகியவர்களும் உள் அடங்குவர். வேலைக்காரர் தற்காலிகமாகத் தங்கியிருப்போர் ஆகியவர்களின் பெயர் குடியிருப்பாளர் பட்டியலில் இடம்பெற்றிருந்தால் அவர்களின் வருமானம்

(6-ம் பக்கம் பார்க்க)

இலங்கை நோக்கி வந்த

## புயல் திசைமாறி போய்விட்டதாம்

[கொழும்பு]

வங்காள விரிகுடாவிலிருந்து இலங்கையின் கிழக்கு மாகாணத்தை நோக்கி வந்து கொண்டிருந்த புயல் நேற்றுக் காலை திசைமாறி வடகிழக்கு கரையோரத்திற்கு சமாந்தரமாக வடமேற்கு நோக்கிச் சென்றது என்று கொழும்பு வானிலை அவதான நிலையம் அறிவித்தது.

இப்புயல் இலங்கையைத் தாக்கும் அறிகுறி எதுவும் இல்லை என்றும் அறிவிக்கப்பட்டது.

நேற்றுக்காலை 8-30 மணிக்கு திருக்கோணமலைக்கு 100 மைல் தொலைவில் இப்புயல் சின்னம் நிலைகொண்டிருந்தது என்றும் யாழ்ப்பாணத்திற்கும் திருகோணமலைக்கும் இடையேயான கடற்கரைப் பகுதியில் நேற்று கடும் மழைபெய்யும் என்றும் அவதான நிலையம் அறிவித்தது. [இ]

## போக்குவரத்து அமைச்சர் விஜயம்

மட்டக்களப்பு திருகோணமலை மாவட்டங்களில் போக்குவரத்துச் சேவைகளை அபிவிருத்தி செய்யவும் ஒரு புதிய டிப்போவினை அமைக்கவும் ஆலோசிக்க இம்மாதம் 24ந் திகதி முதல் 27ந் திகதி வரைக்கும் உத்தியோகபூர்வ விஜயம் ஒன்றை போக்குவரத்து அமைச்சர் ஜனாப் அல்லாஹஜ் எம். ஏச். முஹம்மது மேற்கொள்ள இருக்கிறார். இவர் அம்பாறை, மூதூருக்கு விஜயம் செய்வார். (உ)

யாழ். மாவட்டத்தில்

## மூன்று துப்புத்துலக்கும் பிரிவுகள் நிறுவப்படும்

[யாழ்ப்பாணம்]

யாழ்ப்பாணம் மாவட்டத்தில், மூன்று பொலிஸ் துப்புதுலக்கும் பிரிவு இம்மாதம் 20-ம் திகதி ஆரம்பிக்கப்படவிருக்கிறது.

பொலிஸாரின் நடவடிக்கைகளை விஸ்தரிக்கும் புதிய திட்டத்தின் படியே இந்நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

யாழ்ப்பாணம், கோப்பாய், ஆனைக்கோட்டை பொலிஸ் பகுதிகளில் இத் துப்புதுலக்கும் பிரிவு ஆரம்பிக்கப்படவிருக்கிறது.

பொலிஸ் இன்ஸ்பெக்டர் திரு பி. இராமநாதன் தலைமையில் இயங்கும் இப்பிரிவில், 4 சப்இன்ஸ்பெக்டர்களும், 4 பொலிஸ் சார்ஜன்டுகளும், 20 கன்ஸ்டபிள்களும் கடமையாற்றுவார்கள்.

குற்றச் செயல்கள் சம்பந்தமான புகார்கள் பற்றி இப்பிரிவு உடனுக்குடன் விசாரணையை நடத்தும் என்று கூறப்படுகிறது.

## பிரயாணி தவறவிட்ட பணத்தினால் வந்த பிரச்னை

### சாரதியும் கண்டக்டரும் பொலிஸ் காவலில்

[யாழ்ப்பாணம்]

பஸ்ஸில் பிரயாணியொருவரிடமிருந்து தவறிப்போன பணம், சாரதியின் ஆசனத்தின்கீழ் கண்டெடுக்கப்பட்டதை தொடர்ந்து சாரதியும், கண்டக்டரும் பொலிஸாரினால் கைது செய்யப்பட்டனர்.

கண்டியிலிருந்து வந்த பஸ்ஸில், பிரயாணியொருவர் 2000 ரூபாவை தவறவிட்டாரென்றும் மற்றொரு பெண்பிரயாணி அப்பணத்தை எடுத்து சாரதியிடம் ஒப்படைத்ததாகவும் கூறப்படுகிறது.

சிறிது நேரத்தால், பணத்தை காணவில்லையென்று பிரயாணி தேடியபோது, அப்பணம் கண்டெடுக்கப்பட்டு சாரதியிடம் ஒப்படைக்கப்பட்டதாக, பெண் பிரயாணி கூறினாராம்

சாரதி அதற்கு மறுப்புதெரிவித்ததை தொடர்ந்து யாழ்ப்பாணம் பஸ் நிலையத்தில் பெரும் பிரச்னை எழுந்தது

உடனடியாக, பஸ்நிலையத்தில் கடமையாற்றிய பொலிஸார், பஸ்ஸை பொலிஸ் நிலையத்திற்கு கொண்டு சென்றதாக கூறப்படுகிறது.

குற்றப்பிரிவு சப்இன்ஸ்பெக்டர் சுமணபண்டா பஸ்ஸில் சோதனை செய்து சாரதியின் ஆசனத்திற்கு கீழ் பணத்தை கண்டெடுத்ததாக கூறப்படுகிறது.

சந்தேக நபர்களான இராசதுரை, வேலாயுதம் ஆகிய இருவரும் யாழ். நீதிமன்றத்தில் ஆஜர் செய்யப்பட்டனர். நீதிபதி அவர்களை 1000 ரூபா பிணையில் செல்ல அனுமதித்து கட்டளை கிடைக்கும்போது கிளிநொச்சி நீதிமன்றத்தில் ஆஜராகுமாறு உத்தரவிட்டார். [க]

## ஜி. சி. ஈ. பரீட்சை

### அனுமதிப் பத்திரங்கள்

[கொழும்பு]

பொதுத்தராதர [சாதாரணம்] வகுப்புப் பரீட்சைக்கு தோற்றவிருக்கும் பரீட்சாத்திகளுக்கு அனுமதிப்பத்திரங்கள் அனுப்பப்பட்டு வருகின்றன.

டிசம்பர் மாதம் 14ம் திகதி இந்த சோதனை ஆரம்பமாகி 24ம் திகதிவரை நடைபெறவிருக்கின்றது.

இம்முறை 302000 பேர் இச்சோதனைக்கு விண்ணப்பம் செய்துள்ளனர். இவர்களுக்கு பகுதி பகுதியாக இப்பொழுது அனுமதி பத்திரங்கள் அனுப்பப்பட்டு வருகின்றன. [ம]

## கோட்டு விற்பனவு விளம்பரம்

வழ. இல. M. B. 11791
வைரவி ஆறுமுகம் சிறுவிளான் — வழக்காளி
எதிராக
1. நாகலிங்கம்சிவஞ வசுந்தரமும்
2. பெண் சாரதாம்பிகை இருவரும் முள்ளானை சிறுவிளான் — எதிரிகள்

யாழ்ப்பாணம் டிஸ்திறிக் கோட்டின் M. B. 11791/-ம் இலக்க வழக்கில் எனக்குக் கிடைத்த கோட்டுக் கட்டளைப் படி பின்னுல் விபரிக்கப்படும் 3 துண்டுக் காணிகள் 1977ம் ஆண்டு டிசம்பர் மாதம் 1ம் திகதி வியாழக்கிழமை (1-12-77) முற் கல் 10 மணி தொடக்கம் அந்தக் காணிக்குள் நின்று பிரசித்த ஏலத்தில் என்னல் விற்கப்படும்.

### தீர்வைத் தொகை

ரூபா 14834/-பின் 23-6-70 தொடக்கம் 28-10-71 வரை ரூபாய் 10,000/-க்கு 10 வீத வட்டியும் பின் முழுத் தொகையும் இறுபடும்வரை 5 வீதவட்டியும் கோட்டுச்செலவு ரூபாய் 478/82சதம் இதில் செலவுத் தொகையால்ரூபா200/- கொடுக்கப்பட்டது. மேலும் ரூபா 4000/-மும் ரூபா7000/-மும் 2-9-76ல் 3000/- கொடுக்கப்பட்டது.

### ஆதன விபரம்

1. வடமாகாணம் யாழ்ப்பாணம் டிஸ்திறிக் வலிகாமம் மேற்கு பண்டத்தரிப்பு கோவிற்பற்று சிறுவிளான் இறை 'கட்டாப்புலம்' ப. நி. 15ம் இணறும் செய்பயிர்களும் எல்லை கிழக்கு பொன்னம்பலத்தின் மகள் ராசம்மாவுக்குரிய ஆதனம் வடக்கு கார்த்திகேசுவின் மகள் புவனேஸ்வரி சத்தியபாமாவுக்குரிய ஆதனம் மேற்கு வல்லிபுரம் நாகலிங்கத்துக்கும் மறுபேருக்கும் உரிய ஆதனம் தெற்கு சுப்பிரமணியம் பெண் கமலாம்பிகைக்குரிய ஆதனம் இதில் மறுகாணிகளுக்கு கிணற்றில் பங்கும் வழமையான பாதை வழிவாய்க்கால் உருத்தும் தூர்வையில் பங்கும் தெற்கெல்லைக் காணியால் வடக்கெல்லை ஓரமாக ஆறுமுழ அகலமுள்ள பாதை உருத்தும் புறநீங்கல். பதிவு இல. E 350/18.

2. மேற்படி இறை 'சூரியன்கலட்டி' ப. நி. 56ம் பனைகளும் எல்லை கிழக்கு சண்முகநாதன் பெண் சிவநேசத்துக்குரிய ஆதனம் வடக்கு தாமோதரம்பிள்ளை கனகசுந்தரத்திற்கும் மறுபெயருக்குமுரிய ஆதனம் மேற்கு சுப்பிரமணியம் கனகசபைக்குரிய ஆதனம், தெற்கு காசிப்பிள்ளை பெண் வண்ணுத்தைக்கும் மறுபெயருக்குமுரிய ஆதனங்கள் இது அடங்கலில் சொரியலாய் 1/3 பங்கும் அதைச் சேர்ந்தவைகளும் பதிவு இல E 387/217.

3. மேற்படி இறை நட்டாப்புலம் ப. நி. 16ம் பனைகளும் எல்லை கிழக்கு பொன்னம்பலத்தின் மகள் ராசம்மாவுக்குரிய ஆதனம் வடக்கு மயில்வாகனம் பெண் தனலட்சுமிக்குரிய ஆதனம், மேற்கு சபாரட்டினம் கைம்பெண் மகேஸ்வரிக்குரிய ஆதனம் தெற்கு வல்லிபுரம் கணபதிப்பிள்ளைக்கும் பங்காளருக்குமுரிய ஆதனம். இது அடங்கலும் வடக்குப்பக்கத்தில் கிணற்றில் பங்கும் வழமையான பாதை வழிவாய்க்கால் உருத்தும் கிணற்றில் தெற்குப் பக்கத்தில் மேற்கு ஓரமாக நிற்கும் இரு தென்னைமரங்களும், கிழக்கு வடக்குப்பக்கமாக வடக்கெல்லைக்காணியில் ஓரமாக நாலுமுழ அகலப்பாதை மேற்கு ஒழுங்கைக்குப் போக உரித்தும். பதிவு இல B 387-4

சி. செ. மாரிமுத்து
நீதிமன்றங்களின் விற்பனவு ஆணையாளரும்
விலைமதிப்பாளரும்

விதானைவளவு,
சித்தங்கேணி,
23-9-77. 7699

---

## நீதிமன்ற விற்பனவு விளம்பரம்

யாழ்ப்பாணம் மாவட்ட நீதிமன்றம்

வழக்கு இலக்கம் ஈடு/251
1. கதிர்காமர் சண்முகம் அருந்தவநாதன் கோண்டாவில் — வழக்காளி

எதிராக
1. கந்தையா சிவதாசன் பெண்
2. சரஸ்வதி 3ம் கட்டையடி கள்ளியங்காடு, நல்லூர்.
3. பொன்னம்பலம் பொன்னுத்துரை ஏழாலை மேற்கு, சுன்னுகம். — எதிராளிகள்

யாழ்ப்பாண மாவட்ட நீதிமன்றத்தில் எனக்குக்கிடைத்த நீதிமன்றக் கட்டளைப்படி பின்னுல் விபரிக்கப்படும் ஒரு துண்டுக்காணி 1977ம் ஆண்டு மார்கழி 23ம் திகதி வெள்ளிக்கிழமை (23-12-77) முற்பகல் 10-30 மணி தொடக்கம் அந்தக் காணிக்குள் நின்று என்னுல் பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்.

### தீர்வைத் தொகை

மேற்குறித்த எதிராளிகள் குறித்த வழக்காளிக்கு ரூபா 3792/-வும் மேலும் ரூபா 3000/-க்கு வருடமொன்றுக்கு நூற்றுக்கு 24வீத வட்டிவீதம் வழக்கு அணைத்த திகதியாகிய 1976ம் ஆண்டு புரட்டாதி மாதம் 30ம் திகதியிலிருந்து முழுத்தொகை இறுக்கப்படும்வரையும் வழக்குச் செலவு ரூபா 492 சதம் 05 கொடுக்க வேண்டியிருப்பதாலும்.

### குறித்த ஆதனமாப்பாவது

வடமாகாணம் யாழ்ப்பாணம் டிஸ்திறிக் யாழ்ப்பாணப் பகுதி நல்லூர்க் கோவிற்பற்று நல்லூரிறை 'பதிராயன்புலமும் தட்டான்தோட்டமும்' நிலப்பரப்பு நாலு செய் பயிர் வான்பயிர்களும் கிழக்கிலுள்ள கிணற்றுப்பங்கும் வழி வாய்க்காலும். எல்லை கிழக்கும், தெற்கும் இராசலட்சுமிக்குமுரிய ஆதனம். வடக்கு ஒழுங்கை. மேற்கு பொன்னம்பா சுப்பிரமணியத்திறுதனம். இதடங்கலும்.

சி. ஆ. த. வடிவேலு J. P.
நீதிமன்ற விற்பனை ஆணையாளரும்
விலைமதிப்பாளரும்

'வடிவேல் உதயம்'
காங்கேசன்துறை வீதி,
கோண்டாவில்,
28-10-77. 7693

---

# "யூ. என். பிக்கும் எனக்கும் எவ்வித ஒப்பந்தமும் இல்லை"

## கம்பஹாவில் றேகண விஜயவீர

(கம்பஹா)

"ஐக்கியதேசியக் கட்சிக்கும், எனக்குமிடையில் எவ்வித ஒப்பந்தமும் இல்லை. அப்படி ஒப்பந்தம் இருப்பதாகக் கூறுபவர்களை, அதனை நிரூபிக்கு மாறு சவால் விடுகிறேன்."

கம்பஹாவில் நடந்த ஜனதா விமுக்தி பெரமுனை கூட்டத்தில் பேசிய திரு றேகண விஜயவீர மேற்கண்டவாறு கூறினர்.

திரு. றேகண விஜயவீர மேலும் கூறியதாவது:

இடதுசாரிகளை தாக்குவதற்காகவே தான் சிறையிலிருந்து ஐக்கியதேசியக்கட்சியினுல் விடுதலை செய்யப்பட்டதாக சில தோல்வியுற்ற அரசியல்வாதிகள் எனக்கெதிராக தவறான பிரசாரம் செய்துவருகிறூர்கள் இந்தக் குற்றச்சாட்டில் எவ்வித உண்மையும் இல்லை ஏனெனில் நாட்டில் இன்று இடதுசாரிகள் எவரும் இல்லை.

ஜனதா விமுக்தி பெரமுனையின் நடவடிக்கைகளை பலப்படுத்துவதற்காக நாங்கள் வங்கிக்கொள்ளைகளில் ஈடுபடுவதாகக் கூறிவருகின்றனர் இந்தக் குற்றச்சாட்டுகள் உண்மையல்ல என்பதை உறுதியளிக்கிறேன். மீண்டும் சிறைக்குச் செல்ல அவர்கள் விரும்பவில்லை.

நான் ஒரு உண்மை ஊனமார்க்கிசவாதி சொந்த நன்மைக்காக தொழிலாளர் வகுப்பினரை கைவிட்டு முதலாளிவர்க்கத்துடன் சேர்ந்துகொண்ட போலி இடதுசாரி தலைவர்களை எதிர்ப்பதே என்வேலை யு. என். பி. வெற்றி பெறுவதற்கு இந்தப்போலி இடதுசாரி தலைவர்களே காரணமாக இருந்தார்கள்.

எனக்கு ஆயுதப்படையினருடன் எவ்வித மனக்கசப்புமில்லை ஆனுல் எனது சகாக்களை அழிப்பதற்கு காரண கர்த்தாக்களாக இருந்த சில தலைவர்களிடமே ஆத்திரம் கொண்டுள்ளேன்.

மக்களுக்கு பொய் வாக்குறுதிகளை அளித்து யு.என்.பியும் ஆட்சிக்கு வந்துள்ளது. நாட்டின் பிரச்சினைகளை எந்த முதலாளித்துவ கட்சியாலும் தீர்த்துவைக்க முடியாது.

நாட்டில் இன்று மூன்றில் ஒருபகுதிமக்கள் வேலையற்றவர்களாக இருக்கின்றூர்கள். முதலாளித்துவ அமைப்பின் கீழ் உருவாக்கப்பட்ட திட்டங்கள் வேலையில்லாப்பிரச்சினைக்கு தீர்வுகாணுது

---

## 'பேச்சுவார்த்தை மூலம் லட்சியத்தை பெறமுடியாது'

### இளைஞர் மத்தியில் வவனியா எம். பி.

(வவனியா)

"தமிழர் விடுதலைக் கூட்டணி தனது இலட்சியத்தை அடையவேண்டுமானல் எந்த ஒரு அரசாங்கத்திடனும் பேச்சுவார்த்தையால் அடைய முடியாது. எங்களிடம் உண்மைத் தியாகத்தினுலும், சிந்தனைத்திறன், செயலாற்றல் ஆகிய வற்றுலும் தான் எமது இலட்சியத்தை அடையமுடியும்"

வவனியா தொகுதி தேசிய அரசுப் பேரவை உறுப்பினர் திரு. தா. சிவசிதம்பரம் வவனியாத் தொகுதி இளைஞர் மத்தியில் பேசுகையில் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் பேசுகையில் கூறியதாவது:

"அண்மைக் காலத்தில் ஏற்பட்ட இனக்கலவரத்தின் போது எமதுதொகுதியில் ஏற்பட்ட நஷ்டங்கள், மிகவும் பாரதூரமானதாயினும் அதைக்கண்டு அஞ்சிவிட முடியாது அரசாங்கத்திடம் நாம் மண்டியிட்டு பெறும் அற்ப சொற்ப சலுகைகள் எமது இளைஞர்களை வாழவைக்க மாட்டாது."

"நாம் இந்நாட்டுப் பிரசைகள் என்ற உரிமையும், எமக்கென எமது பிரதேசம் என்ற வரையறையும் பெறுவதற்கு இளைஞர்களாகிய நீங்கள் தற்காலிக சலுகைகளை மறந்து தொண்டு செய்ய வேண்டிய காலம் நெருங்கி வந்துவிட்டது" (ச)

---

## நீதிமன்ற விற்பனவு விளம்பரம்

யாழ்ப்பாண மாவட்ட நீதிமன்றம்

1. இராசையா செல்லத்துரையும்
2. பெண் வாலாம்பிகையும் இருவரும் காரைநகர். — வழக்காளிகள்

வழ. இல. எம். பி/13919
எதிராக
1. மூத்ததம்பி சின்னத்துரை (நியமனம் எதிரானி)
2. சங்கரப்பிள்ளை கந்தையாவும் இருவரும் 20/4, பண்டாரக்குளம் றேட், யாழ்ப்பாணம். — எதிராளிகள்

யாழ்ப்பாண டிஸ்திறிக் கோட்டின் எம். பி. 13919-ம் இலக்க வழக்கில் எனக்குக் கிடைத்த கோட்டுக்கட்டளைப்படி பின்னுல் விபரிக்கப்படும் ஒரு துண்டுக் காணியை 1977-ம் ஆண்டு டிசம்பர் மாதம் 12-ந் திகதி (12-12-1977) புதன்கிழமை முற்பகல் 10 மணி தொடக்கம் அந்தக் காணிக்குள் நின்று பிரசித்த ஏலத்தில் என்னுல் விற்கப்படும்

### தீர்வைத்தொகை

ரூபா 4630/-ம் 25-6-73 தொடக்கம் 12-9-74 வரைக்கும் ரூபா 3000/-க்கும் 12 வீத வட்டியும் அதன் பின் முழுத் தொகைக்கும் இறுக்கும் வரை 5 வீத வட்டியும் கோட்டுச் செலவு ரூபா 418-35 சதமும்.

### ஆதன விபரம்

வடமாகாணம் யாழ்ப்பாணம் டிஸ்திறிக் யாழ்ப்பாணப் பகுதி நல்லூர் கோவிற்பற்று நல்லூர் இறை 'பண்டாரக்குளமும் மற்றக் காணித் துண்டுகளும்' D/177/90ன் கீழ்பதிவு பெற்ற நெற்பரப்பு 10ம் மேற்படி காணி நெற்செய்கை பரப்பு 2ம் D/237/26ன் கீழ் பதிவு. இரு துண்டுகளும்சேர்த்து நெற்பரப்பு 12. இதில் பிரிவு பெற்ற பரப்பு 6 (Lms P C) மேற்குப் பக்கமாக விடப்பட்டது. மிகுதிக் காணி நெற்பரப்பு 6 Lms. P. C.ம் வடக்குப்பக்கத்து எல்லையிலுள்ள கிணற்றுப் பங்கும் வடக்கெல்லைக் காணியின் மேற்கெல்லை ஓரமாக வடக்கேயுள்ள றேட்டுப் போக்குவரத்துக்குள்ள 6 அடி அகல ஒழுங்கை உரித்தும். இக்காணியின் எல்லை கிழக்கு செல்லப்பா கைலாசபிள்ளையின் ஆதனம். வடக்கு கந்தையா பொன்னுத்துரையின் ஆதனம். மேற்கு ஆசைப்பிள்ளை நடராசா பெண் இலட்சுமி அம்மாவின் ஆதனம், தெற்கு குளம் (D 295/220)ன்கீழ் பதிவு.

க. சரவணமுத்து,
கொமிஷனரும்,
விலைமதிப்பாளரும்.

38/1, சோமசுந்தரம் அவென்யூ,
சுண்டிக்குளி,
யாழ்ப்பாணம்,
21-10-77. 7698

---

## மரம் நாட்டு விழா

(யாழ்ப்பாணம்)

யாழ். மாவட்ட சாரணர் இளைச் சங்கத்தின் சாரணாளர் சங்கத்தின் மரம்நாட்டு விழா யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரியில நடைபெற்றது.

யாழ். மாவட்ட சாரணர் சங்க நிர்வாகக் குழுத்தலைவர் திரு. சே. ஜி. அரசரத்தினம் தலைமையில் இவ்விழா நடைபெற்றது. வட பகுதியில் உள்ள சாரணக்குழுக்கள் உள்ள 35 பாடசாலைகள் வரையில் இதில் பங்குபற்றி வனபரிபாலன பிரதிஅதிகாரி திரு ஏ. நாகரத்தினம் யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி அதிபர் திரு. பொ. ச. குமாரசாமி, மிக்லைற் ஆசிரியர் திரு. க. சி. குலரத்தினம் யாழ். மாவட்ட சாரண ஆணையாளர் திரு. ஓ. கந்தமூர்த்தி, திரு க.சன

(6-ம் பக்கம் பார்க்க)

---

## வரி விளம்பரம்

### தவறிவிட்டன

யாழ்ப்பாணம் பஸ் நிலைய மண்டைதீவு தரிப்பில் Q 487072 இலக்கத்தொடர் 10 கூப்பன்கள் தவறிவிட்டன. கண்டெடுத்தவர்கள் தந்துதவுக. மரியாம்பிள்ளை பிலிப்பையா, 3ம் வட்டாரம், மண்டைதீவு. 7701

---

## மாநகராட்சிமன்றம், யாழ்ப்பாணம்

### ஏலவிற்பனை

நல்லூர் திருவிழாவின் போது பாவிக்கப்பட்ட சிலாகைகள் (தீப்பர்) 21-11-77 ஆம் திகதி முற்பகல் 9-00 மணியளவில் நல்லூர் கல்யாணமண்டப வளவில் வைத்து ஏல விற்பனை செய்யப்படும்.

சித்திபெற்ற கேள்விக்காரர் குறிப்பிட்ட தொகையை உடனடியாகச் செலுத்தி சிலாகைகளைப் பெற்றுக் கொள்ளலாம்.

க. சிவஞானம்
மாநகராட்சிமன்ற ஆணையாளர்.

மாநகராட்சிமன்ற அலுவலகம்,
யாழ்ப்பாணம்.
16-11-77. 7700

## தமிழ்நாடு புயல் அகதிகளுக்கு

# மத்திய அரசு நிதி இராணுவ உதவி அளிக்கும்

### பட்டேல், ஜெகஜீவன் உறுதி

புதுடில்லி, நவ. 17

தமிழ்நாட்டில் வெள்ளம், புயலால் பாதிக்கப்பட்டவர்களுக்கான நிவாரணப்பணிகளை மேற்கொள்ளுவதற்கு வேண்டிய நிதியை மத்திய அரசு வழங்கும் என்று மத்தியநிதி அமைச்சர் திரு. எச். எம். பட்டேல் உறுதி அளித்தார்.

இக்குழுவினர் பாதுகாப்பு அமைச்சர் திரு. ஜெகஜீவன் ராமையும் சந்தித்தனர்.

புயல் நிவாரணப் பணிகளை மேற்கொள்ள இராணுவ உதவி அளிக்கப்படும் என்று திரு. ஜெகஜீவன் ராம் இக்குழுவினரிடம் உறுதி அளித்தார். (இ)

## பலியானோர் தொகை 299 ஆக அதிகரிப்பு!

சென்னை, நவ. 17

தமிழ்நாட்டில் புயலுக்குப் பலியானவர்களின் தொகை 299 ஆக அதிகரித்துள்ளது என்று தமிழக அரசு அறிவித்துள்ளது.

70 ஆயிரம் வீடுகள் இடிந்துள்ளன என்றும் 2 லட்சம் ஏக்கர் நிலத்தில் உணவுப் பயிர்கள் சேதமடைந்துள்ளன என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது.

புயல்அகதிகளுக்கான நிவாரணப் பணிகளை தமிழக அரசு தீவிரமாக மேற்கொண்டு வருகிறது. (இ)

## 'ரஷ்ய சமாதானகொள்கை வளரும் நாடுகளுக்கு உறுதுணை'

மாஸ்கோ, நவ. 17

"சோவியத் யூனியன் சர்வதேச அரங்கில் பின்பற்றிவரும் சமாதானக்கொள்கை வளரும் நாடுகளின் முன்னேற்றத்துக்குப் பெருந்துணைசெய்கின்றது. ஏகாதிபத்திய தளங்களை இல்லாதொழிக்கவும், ஆயுத உபகரணத்தை எதார்த்தமாக்கவும், இணக்க அமைதிப் போக்கினை நிரந்தரமாக்கவும் சோவியத் யூனியன் அயராது மேற்கொண்டு வரும் பிரயத்தனங்கள் வளரும் நாடுகளுக்கு நம்பிக்கையூட்டுவனவாக உள்ளன" என அக்டோபர் சோஷலிஸப் புரட்சியின் 60-வது ஆண்டு விழாவினையொட்டி மாஸ்கோவில் நடைபெற்ற கூட்டமொன்றில் பேசுகையில் இலங்கை கம்யூனிஸ்ட் கட்சியின் பொதுச் செயலாளர் திரு. பீட்டர் கெனமன் கூறினார்.

அவர் மேலும் கூறியதாவது:

"சோஷலிஸ நிர்மாணத்தில் சோவியத் யூனியன் ஈட்டியுள்ள வியத்தகு சாதனைகள், சோஷலிஸத்தின் வாயிலாகவும், சோஷலிஸ நாடுகளின் துணையுடனுமே ஏகாதிபத்திய சூழ்ச்சிகளுக்கு எதிராகத் தமது சுயாதீனத்தையும் சுயாதிபத்தியத்தையும் தாம் பாதுகாக்க முடியும் என்ற நம்பிக்கையை வளரும் நாடுகள் மத்தியில் உருவாக்கியுள்ளன.

"சோவியத் மக்கள் மேலும் பல உரிமைகளை அனுபவிக்க புதிய சோவியத் அரசியல் சட்டம் வகைசெய்கின்றது. சடப்பொருட்களை விடுத்து மனித உயிர்களை மாத்திரம் இரைகொள்ள வல்ல நியூட்ரன் குண்டு வகையறுக்கள் தயாரிக்கப்படுவதை நியாயப்படுத்த முன்வருபவர்கள் சோவியத் யூனியன் மனித உரிமைகள் இல்லையே என பிரதிபலிப்பது விசித்திரமானதாயுள்ளது!" [இ]

## லெபனான் எல்லையில் 20 இஸ்ரேலிய வீரர் கொலை!

பெய்ரூட், நவ. 17

இஸ்ரேல் தெற்கு லெபனான் எல்லையில் 20 இஸ்ரேலிய துருப்புக்களை பாலஸ்தீன கமாண்டோக்கள் சுட்டுக் கொலைசெய்துள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

இஸ்ரேலில் இருந்து தென் லெபனானுக்குள் நுழைய முயன்றபோதே இந்த 20 வீரர்களும் இயந்திரத் துப்பாக்கியால் சுட்டுக் கொலைசெய்யப்பட்டனர் என்று பாலஸ்தீன வீரர்கள் தெரிவித்தனர்.

இச்செய்தி தவறானது என்றும் இஸ்ரேலிய வீரர்கள் எவரும் கொலைசெய்யப்படவில்லை என்றும் இஸ்ரேலிய அரசு அறிவித்தது. [இ]

## 'திரு' சிரார்த்த தினம்

(யாழ்ப்பாணம்)

தமிழ்தலைவர்களில் ஒருவரான அமரர் திருச்செல்வத்தின் முதலாவது சிராத்த தினத்தை யாழ்ப்பாணத்தில் கொண்டாட தமிழர் விடுதலைக்கூட்டணி தீர்மானித்துள்ளது.

அன்றையதினம் அவருக்கு அஞ்சலி செலுத்துமுகமாக மௌன ஊர்வலம் மதஸ்தலங்களில் விசேட பூசை பொதுக்கூட்டம் ஆகியவற்றை நடாத்த ஏற்பாடாகியுள்ளது. (கெ-இ)

## மின்சக்தியில் இயங்கும் முதலாவது கார்

லெனின்கிராட், நவ. 17

மின்சக்தியில் இயங்கும் புதிய ரக கார் ஒன்று லெனின்கிராட்டில் உருவாக்கப்பட்டுள்ளது.

"யூ. ஏ. இஸட்-45 எம்" வாகன அமைப்பின் அடிப்படையில் இக்கார் உருவாக்கப்பட்டுள்ளது.

10 அந்தர் எடையைத் தாங்கிச் செல்ல வல்ல இக்கார் மணிக்கு 45 மைல் வேகத்தில் ஓடுமாம்!

இந்த ரக வாகனங்கள் நகரங்களில் சாமான்களை ஏற்றியிறக்குவதற்கே பெரிதும் பயன்படுத்தப்படவுள்ளன. (இ)

## பொது அறிவுப் போட்டி

(பண்டத்தரிப்பு)

வடலியடைப்பு அரசடி சனசமூக நிலைய ஆண்டுவிழாவை முன்னிட்டு அகில இலங்கை ரீதியில் பொது அறிவுப்போட்டி நடைபெறவுள்ளது. [இ]

## இரவல் இருதயபெண் தற்கொலை!

கேப்டவுன், நவ. 17

இரண்டாவது இருதயம் பொருத்தப்பட்ட பெண் ஒருவர் தற்கொலை செய்து கொண்டார்.

பிரபல இருதய மாற்று சத்திரசிகிச்சை நிபுணர் டாக்டர் கிறிஸ்டியன் பேர்னாட் இரண்டு வாரங்களுக்கு முன்னர் இப்பெண்ணுக்கு இரண்டாவது இருதயம் ஒன்றைப் பொருத்தினர்.

ஆஸ்பத்திரியில் சிகிச்சை பெற்றுவந்த இப்பெண் நேற்று முன்தினம் ஆஸ்பத்திரி மேல்மாடியின் ஜன்னல் ஊடாக வெளியே பாய்ந்து தற்கொலை செய்து கொண்டார் என அறிவுக்கப்பட்டுள்ளது. (இ)

## "இளம் எழுத்தாளர்களை ஊக்குவித்தவர்"

(யாழ்ப்பாணம்)

யாழ். இலக்கிய வட்டத்தின் ஸ்தாபகரும் போஷகருமான இரசிகமணி கனகசெந்திநாதனது மறைவு தமிழ் இலக்கிய உலகுக்கு ஈடுசெய்யமுடியாத இழப்பாகும்.

சிறந்த எழுத்தாளரும், பேச்சாளரும், அறிஞருமாகிய

[5-ம பக்கம பார்க்க]

## நெல்உத்தரவாத விலை

# பெரும்பாலனவர்களுக்கு நன்மையளிக்காது

### வி. தர்மலிங்கம் கூறுகிறார்

(கொழும்பு)

நெல்லுக்கு அளிக்கப்படும் உத்தரவாத விலையை அதிகரித்திருப்பது விவசாயிகளுக்கு நன்மையளிப்பதுபோல் தோன்றினாலும் நாட்டுக்குத் தீங்கு விளைவிப்பதாகவே முடியும் என்று மானிப்பாய் எம். பி. திரு. வி. தர்மலிங்கம் கூறினார்.

நிதியமைச்சர் திரு. ரொனிடி மெல் கடந்த செவ்வாயன்று தேசிய அரசுப்பேரவையில் சமர்ப்பித்த வரவு-செலவுத் திட்ட ஆலோசனைகள் தொடர்பாக அபிப்பிராயம் தெரிவிக்கையிலேயே திரு. தர்மலிங்கம் இவ்வாறு கூறினார்.

நெல்லுக்கு உத்தரவாத விலையை அதிகரித்ததின்மூலம் 10 லட்சம் மக்கள் பயன்பெறுவார்கள். ஆனால் விவசாயிகள் அல்லாதவர்கள் அதைவிட அதிகமானவர்களாகும். இத்திட்டத்தின்மூலம் ஏனைய எல்லாப் பொருட்களின் விலைகளும் அதிகரிக்கும், எல்லா பொருட்பொருட்களின் விலைகளும் அரிசியின் விலையிலேயே தங்கியிருக்கிறது என்றார் திரு. தர்மலிங்கம்.

நெல் உற்பத்திக்கான செலவினங்களைக் குறைப்பதற்கு மாற்றுவழி ஏதும் செய்திருப்பார்களானால் அது வரவேற்கக் கூடியதாய் இருந்திருக்கும். விவசாயிகளுக்கு அது நன்மை அளிக்கும் அதே சமயம் ஏனைய மக்களைப் பாதித்துமிருக்காது என்றார்.

இந்த வரவு-செலவுத் திட்டம் ஐ. தே. கட்சியின் திட்டமல்ல, உலக வங்கியின் திட்டம். உலக வங்கியின் ஆலோசனையின் பேரிலேயே இது தயாரிக்கப்பட்டிருக்கிறது என்றார்.

பங்கீட்டுப் பொருட்கள் ரத்துச் செய்யப்படுவது பற்றிக் குறிப்பிடுகையில், இது பெரும்பாலான மக்களைப் பாதிக்கும் என்றார்.

சுதந்திர வர்த்தக வலயத் திட்டம்பற்றி அவர் குறிப்பிடுகையில், இது நாட்டுக்கு ஆபத்தை விளைவிப்பதாகும் என்றார். கிழக்கிந்திய கம்பனியார் இந்தியாவுக்கு வந்தபோது வர்த்தகத்துக்குத்தான் வருகிறோம் என்றார்கள். பின்னர் நாட்டையே பிடித்து ஆண்டார்கள். வர்த்தக வலயத்துக்குள் வர்த்தகத்துக்காக வருகிறவர்களுக்கே நாடு அடிமையாக நேரலாம் என்றார்.

(5ம் பக்கம் பார்க்க)

# 'சீனி விலைகுறைப்பினால் பனங்கட்டி தொழில்பாதிக்கப்படக்கூடாது!"

(யாழ்ப்பாணம்)

"நிதி அமைச்சர் தமது பட்ஜட் யோசனைகளில் சீனியின் விலையை ருத்தல் ஒன்று மூன்று ரூபாவாகக்குறைத்துள்ளார். இதுவரவேற்கத்தக்கது. ஆனால் சீனி விலைக் குறைப்பினால், பனங்கட்டித் தொழில் பாதிக்கப்படக்கூடாது."

பட்ஜட்யோசனைகள்குறித்து முன்னாள் காங்கேசன்துறை பட்டினசபைத் தலைவர் திரு. கே. ஜெயபாலசிங்கம் கருத்து வெளியிடுகையில், மேற்கண்டவாறு கூறினார்.

"பட்ஜட்மீது பொதுவாக ஒரு கண்ணோட்டத்தைச் செலுத்தினால், அதில் நல்ல பல யோசனைகள் தெரிவிக்கப்பட்டிருப்பதைப் பாராட்டாமலிருக்க முடியாது. வருமான வரி அதிகரிக்கப்பட்டிருப்பது வரவேற்கத்தக்கது. இத்திட்டம் பணக்கார வர்க்கத்தையே பாதிக்கும். நெல்லின் உத்தரவாத விலை அதிகரிக்கப்பட்டிருப்பது விவசாயிகளுக்குமகிழ்ச்சியைக் கொடுக்கும். ஆனால் இதனால் அரிசி விலை உயரக் கூடாது. பொதுச்சந்தையில் அரிசியின்விலையில் அதிகரிப்பு ஏற்படாதபடி, நிர்ணய விலையை அரசு விதிக்கவேண்டும்" என்று தெரிவித்த திரு. கே. ஜெயபாலசிங்கம்;

"ஐம்பதுரூபாசம்பளஉயர்வு அளிக்கப்பட்டுள்ளது. அதே நேரத்தில் 300 ரூபா சம்பளம் பெறுவோரின் இலவச அரிசி ரத்துச்செய்யப்படுமென்று அறிவிக்கப்பட்டுள்ளது: இந்த முடிவை நிதி அமைச்சர் மறுபரிசீலனைசெய்து 300 ரூபா என்றிருப்பதை 500 ரூபாவாக்கி இத்தொகைக்குக் கூடுதலாகச் சம்பளம் பெறுவோரினது இலவச அரிசியை ரத்துச்செய்வது வரவேற்கக்கூடியதாக இருக்கும். பீக்ஸ், சி. ஆர். ஏ. முறை ரத்துச்செய்யப்பட்டதன் மூலம், வெளிநாடுகளிலிருந்து நியாயமான விலையில் பொருள்களை இறக்குமதி செய்ய முடியும். வேலையற்றிருக்கும்இளைஞர்களுக்கு மாத அலவன்ஸ் 50 ரூபா வழங்கும் யோசனை ஏற்கக்கூடியதாக இருந்தாலும், இதன்மூலம் இளைஞர்கள் சோம்பேறிகளாகாமல் நல்லவழியில்செல்ல வழிசமைக்கப்பட வேண்டும். மதுபானங்களின் விலைகளை இன்னும் அதிகரித்திருக்கலாம். சிறுகைத்தொழில்களை ஊக்குவிக்க யோசனைகள் தெரிவிக்கப்பட்டிருப்பது பாராட்டத்தக்கது" என்று திரு. கே. ஜெயபாலசிங்கம் தெரிவித்தார்.

சிப்
நவீன
மலகூடச் சுத்தமாக்கி




சிப் கொண்டு உங்களது மல கூட ... கைகளைச்சுத்தஞ் செய்யுங்கள். அது கறைகளை அகற்றி, தொற்றுத் தடை அளித்து, காற்றைச் சுத்தமாக்குகிறது-செப்ரிக் தாங்கிகளுக்கும் உகந்தது.

இப்பொழுது அழகிய கறுப்பு அடைப்பிகளிற் கிடைக்கிறது.

மற்றொரு தரமான லிங்கெம் தயாரிப்பு

# பல்லாயிரம் தமிழாசிரியரில் தனித்துப் பிரகாசித்தார்

பல்லாயிரம் தமிழாசிரியர்கள் மத்தியில் இலக்கியம் படைத்தலின் மூலம் தனித்துவமாய்ப் பிரகாசித்துக்கொண்டிருந்த இரசிகமணி கனக. செந்திநாதன் மறைவு தமிழ் கூறும் நல்லுலகெங்கும் கவலையை விதைத்துள்ளது அன்னார் வாழும் காலத்திலேயே அவர் திறமையையும் சேவையையும் பண்டிதமணி உட்படப் பல பெரியார்கள் பாராட்டிப் புகழ்ந்து வாழ்த்தியுள்ளனர். இத்தகைய பாராட்டுகளில் சில கீழே தரப்படுகின்றன:

''நான் நவீன இலக்கிய உலகத்தையோ ஜனநாயக உலகத்தையோ தீண்டாத மிகப் பழமையான பிற்போக்காளர்களோடு தொடர்பும் மதிப்பும் உள்ளவன். செந்திநாதன் அதற்கு எதிரானவர். இக்கால இலக்கியத்தில் முழுகித் திளைத்தவர். அப்படியிருந்தும் எங்கள் தொடர்பு வளர்ந்துகொண்டேயிருக்கிறது. அவர் என்னிடம் என்ன பெற்ருரோ நான் அறியேன். அவரிடம் நான் பெற்றவை அதிகம்.''

—பண்டிதமணி சி கணபதிப்பிள்ளை



''தங்கத் தாத்தா சோமசுந்தரப் புலவர் முதற் தமிழ்ப் பேராசிரியர் விபுலானந்த அடிகளார், புலவர்மணி பெரியதம்பிப்பிள்ளை ஆகிய பெரும் புலவர்களின் பாடல்களை நாடு நயக்கச்செய்தவர் செந்திநாதன்.

—இராஜ. அரியரத்தினம்.

திரு கனக. செந்திநாதன் அவர்கள். ஊதினல் விழுந்துவிடக்கூடிய அவ்வளவு மெலிந்த மனிதராயினும் இலக்கிய உலகில் எதிர்நோக்கி வீசிய கடும் புயல்களையும் எதிர்த்து முன்னேறிய வலிமை இவருடையது.

—தி. ச. வரதராசன்.

''பூ! என்று ஊதினல் விழுந்துவிடக்கூடிய ஒருவரை யாழ்ப்பாண நகர வீதிகளிலும் பத்திரிகை-புத்தகக் கடைகளிலும், சினிமாத் தியேட்டர்களிலும், கூட்டங்கள், விளையாட்டுக்கள் நடைபெறும் இடங்களிலும் அடிக்கடி சந்திப்பீர்களானல் அவர்தான்

''இன்று ஈழத்தில் வாழ்ந்துகொண்டிருக்கும் எழுத்தாளரைக் கணக்குப்போட்டு வைத்திருக்கிருர். தரமுள்ள எழுத்தாளர்களோடு பழகி, மேலும் எழுத்துத் துறையிற் பெரிதும் உழைத்துவருகின்ருர். எழுத்தாளர்களைப் பற்றி இவர் போட்ட கணக்குத் தட்டித் தவறின்றித் தமிழுலகத்துக்கு ஒப்படைக்கப்பட்டிருக்கின்றது ஈழத்து இலக்கிய வளர்ச்சி இதனை வெளிப்படுத்துகின்றது.

—வித்துவான் F. X. C. நடராசா

''புதுமைப்பித்தன், அழகிரிசாமி, இரகுநாதன், ஜெயகாந்தன் போன்ற தமிழகத்து எழுத்தாளர்களிடம் இந்த audacity எப்படி இலக்கியத்திற்கு வலுவளிக்கிற அருகுணமாக இருக்கிறதோ அப்படியே கனக செந்திநாதனிடமும் வாய்த்திருக்கிறது.''

—நா. பார்த்தசாரதி

''கனக செந்திநாதன் அவர்கள் தமிழ்ச் சட்டம்பியார். ஆனாலும் தமிழாசிரியர்களிலும் பார்க்க அவர் வேறு ஓர் இளம் வர்க்கம். ஒரு பெண்ணிற்குச் சீதனமாகக் கொடுக்கக்கூடிய செல்வத்தைத் தமிழ்ப் புத்தகங்களும் பத்திரிகைகளும் வாங்குவதிற் செலவு செய்தவர்.''

—எஸ். பொன்னுத்துரை

''இரசிகமணி கனக செந்திநாதன் ஈழத்தின் தலைசிறந்த எழுத்தாளரும் பேச்சாளருமாவர்''.

—எம். ஏ. ரகுமான்

''தனது பிள்ளைகளுக்குச் சீதனமாக அவர் பொருள் சேர்க்கவில்லை. காணி, வீடு நிலம், தோட்டம் வாங்கவில்லை. ஓய்வுநேர வேலையாக 'டியூசன்' கொடுக்கவில்லை. தானுண்டு தன் குடும்பமுண்டு என்று வாழவில்லை, சென்ற முப்பது வருட காலமாக அவர் இந்த நாடு, அதன் எழுத்தாளர், அவர் படைப்புகள் என்றே சிந்தித்தார்.

—நிருபர் சி. செல்லத்துரை

''ஈழத்து இலக்கியத்துறையிலும், தமிழ்நாட்டு நவீன இலக்கியப் பரப்பிலும் ஆழ்ந்த புலமை மிகுந்த ஒரு பேராசிரியர் இரசிகமணி அவர்கள் எழுத்தாளர், படிப்பாளர், திறனய்வாளர், பேச்சாளர், இரசனையாளர், அன்பாளர், பண்பாளர், தொழிலாளர் என்போரின் சங்கமந்தான் இரசிகமணி எனப்படும் கனக. செந்திநாதன்.''

—கவிஞர் வி. கந்தவனம்

## இலக்கிய வட்டத் தந்தாய்

இலக்கியச் செல்வா! நல்யாழ்
இலக்கிய வட்டத் தந்தாய்
துலங்கமார் ரசனை இன்பம்
தொடரிமா லயமே; சிந்தைப்
பலத்தநேர் பரந்த பண்பார்
பணிநிறைப் பாங்கா ரன்பா!
தலத்தெழில் தமிழே! தங்கத்
தலைவரே செந்தி ஐயா!

கட்டுரை கொட்டுஞ் செந்தேன்
கதைவழி கமழும் கன்னல்
பொட்டெனத் தொட்டுக் காட்டும்
பொழிப்புரை, போதங் கூட்டும்
மெட்டொளிர் பாட்டும் நல்ல
மெய்நெறி விரிவு ரைகள்
கட்டழ கீட்டும் எங்கள்
கனகசெந் தியரே ஐயா!

நடுகாண் ஏடு நல்கி
நமக்கெலாம் நடைச்சீர் காட்டிக்
கூடுமா மன்றந் தன்னில்
குணமுறும் கொள்கை நாட்டித்
தேடரும் தமிழார் மூத்துத்
திகழ்ந்திடச் சொற்களீட்டி
நீடுபொன் இலக்கி யஞ்செய்
நிறைசெந்தி நாதா நீரே!

உள்ளதைச் சொல்லி நல்ல
ஊக்கமே கொடுக்கும் தந்தாய்!
வள்ளலே தமிழே வாழ
வாக்கியம் வகுத்தும் சின்னப்
பிள்ளைபோ லுள்ளச் செம்மை
பிறங்கிடும் செந்தி ஐயா
தெள்ளிய ஞானந் தேனே!
தெள்ளிய ஞானத் தேனே!
சென்ருயோ சிவனை நாடி.

— கவிஞர். வே. ஐயாத்துரை

## தீபாவளிப் பரிசு

[யாழ்ப்பாணம்]

கைதடி சைவ அநாதைஇல்ல சிறுவர்களுக்கு யாழ். ரோட்டரிக் கழக, மாதர் சங்கத்தினர், தீபாவளிக்குத் துணி அன்பளிப்புச் செய்தனர்.

யாழ். ரோட்டரிக்கழக மாதர் சங்கத் தலைவி திருமதி சத்தியசேனதிராசா தலைமையில், திருமதி குகதாசன், திருமதி எஸ். சண்முகலிங்கம், திருமதி மகேந்திரன், திருமதி பரமேஸ்வரன், திருமதி சோமசுந்தரம் ஆகியோர், கைதடி அநாதை இல்லத்திற்கு நேரடியாகச் சென்று சிறுவர்களுடன் கலந்துரையாடி, அவர்களுக்கு 35யார் துணிகளைவழங்கினர்கள் [க]

## 'தேன்துளிகள்'

[பண்டத்தரிப்பு]

இலங்கைப் பல்கலைக் கழக யாழ்ப்பாண வளாகத், தமிழ் மன்றத்தினர் 'தேன்துளிகள்' என்னும் கவிதைத் தொகுதியொன்றை விரைவில் வெளியிடவுள்ளனர்.

மேற்படி வளாக மாணவ மாணவியரின் ஆக்கங்கள் இக் கவிதைத் தொகுதியில் இடம் பெற்றுள்ளன. [அ[

# பண்டை இலக்கியம்பற்றி மாணவர் அறிய முடியாநிலை

### கருத்தரங்கில் கவலை

(அரியாலை)

''தற்கால பாடநூல்களிலும், கல்வி முறையிலும் பழைய இலக்கியங்கள் இடம் பெறவில்லை. இதனல் மாணவர்கள் நமது பழைய இலக்கியங்களைக் கற்றுத் தேற வாய்ப்பில்லாமல் போய்விட்டது. கம்பராமாயணத்தில் சிறந்த பாத்திரம் எது? என்ற கேள்வி இன்று எழுந்துள்ளது. இலக்கிய நூல்களைக் கற்று இதற்கு விடை காண முடியாவிட்டாலும் இப்படியான கருத்தரங்கை அமைத்து இதில் தமது கட்சியை நிலைநிறுத்த மாணவர் முயற்சி செய்யக் கூடியதாக இவ்விவாத அரங்கு அமைக்கப்பட்டது பாராட்டத்தக்கது.''

இவ்வாறு யாழ். பரி யோவான் கல்லூரியில் நடைபெற்ற தமிழ்த் தின விழாவில் ''கம்பர் காவியப் பாத்திரங்களில் சிறப்புப் பெற்றது எது'' என்ற தலைப்பில் நடைபெற்ற கருத்தரங்கிற்குத் தலைமை வகித்த திரு. செ. கணபதிப்பிள்ளை தமது உரையில் குறிப்பிட்டார்.

''இராமன் சிறப்புப் பெற்றவன்'' என்று யாழ். மத்திய கல்லூரி மாணவன் செல்வன் ச. இந்திரனும், இராவணனே சிறப்புப் பெற்றவன் என்று பரி. யோவான் கல்லூரி மாணவன் செல்வன் ஜீ. கிவேந்திரனும், பரதனே சிறந்தவன் என்று புனித சம்பத்திரிசியார் கல்லூரி மாணவன் செல்வன் ந விஜயரத்தினமும், அனுமானே சிறந்தவன் என்று யாழ். இந்துக்கல்லூரி மாணவன் செல்வன் க. குமணனும், சீதையே சிறந்தவள் என்று சுண்டிக்குளி மகளிர் கல்லூரி மாணவி செல்வி ந. காயத்திரியும், கைகேயி சிறந்தவள் என்று திருக்குடும்ப கன்னியர் கல்லூரி மாணவி செல்வி ம. சாந்தினியும், விபீஷணனே சிறந்தவன் என்று வேம்படி மகளிர்கல்லூரி மாணவி செல்வி செ. சந்திரிகாவும் பேசினர்.

தமிழ்ச் சங்கச் செயலாளர் செல்வன் க பாஸ்கரன் நன்றி கூறினர். (உ)

## பாராட்டும் பட்டமும்

[அரியாலை]

''என்னைப் போன்ற பலர் இன்று நல்ல நிலையில் இருப்பதற்கும் உயர்ந்த பதவிகளை வகிப்பதற்கும் வழிவகுத்தவர்களுள் திரு க. சுப்பிரமணியம் குறிப்பிடத்தக்கவர் ஆவார். யாழ். வளாகத்தலைவர் பேராசிரியர் சு. வித்தியானந்தனும் என் போன்றவர்களும் இவருடைய மாணவர்கள் என்று கூறுவதில் நான் பெருமையடைகிறேன். இவரைத்தமிழ் வளர்த்த ஆசான் என்று கூறினல் அதுமிகையாக'' ।

இவ்வாறு சமுகசேவை உதவி ஆணையாளர் திரு கே.

[5-ம் பக்கம் பார்க்க

# 'மில்க்வைற்' பொன் விழா

அன்று காலை பொழுது விடிந்தது. ''பொழுது புலர்ந்தது யாம் செய்த தவத்தால்'' என்று அதிகாலையிலேயே நித்திரை விட்டெழுந்த மில்க்வைற் தொழிலதிபர் திரு. கனகராசா ஐம்பதாவது நான் மங்கலம் அன்று. அவர்தம் தந்தையார் வீ. மு. கந்தையா அவர்கள் 1927-ம் ஆண்டில் ஆரம்பித்த மில்க்வைற் தொழிலகத்தின் பொன்விழா பொலிந்த நாள்.

இருவேறு விழாக்களை ஒருசேர நடத்துவதற்கு முனைந்த தொழிலதிபர் முதல்வேலையாக நுழைவாயிலில் உள்ள மூத்த பிள்ளையாரான விநாயகப்பெருமானுக்கு விசேட அபிடேக ஆராதனைகள் செய்வித்து வணங்கினர். பொழுது விடியும் நேரம் திரு நல்வேலிக்குச் சென்று முதுகண்ணாய், மூதறிவாளராய் முனிவராய்த்தமது தவச்சாலையில் இருக்கும் பண்டிதமணி கணபதிப்பிள்ளை ஐயா அவர்களை வணங்கி ஆசீர்வாதம் பெற்று ஆலயத்திற்கு மீண்டனர்.

அலங்கரிக்கப்பெற்ற வழியே ஊர்வலமாக பொன்விழா மண்டபத்துள்ளே புகுந்தவர். பொன்விழா மண்டபம் புதிதாயமைத்து வள்ளுவர்கோட்டம் எனப் பெயர் பெறுவதாயிற்று. மேடையின் முகப்பில் அற்புதமாயமைந்த அழகிய கேடகத்தில் ஆனந்த தாண்டவமாடும் நடராசர் சிலையும், உமாதேவியார் சிலையும், மாணிக்கவாசகர் சிலையும் அலங்கரிக்கப்பெற்றிருந்தன.

மேடையில் ஒருபுறத்தில் பிரம்மஸ்ரீ ஆனந்த நடேசக் குருக்கள், பிரம்மஸ்ரீ சீதாராம சாஸ்திரிகள் புரோகிதர்கள், குருகுல ஆச்சாரியர்கள், மாணவர்கள், ஓதுவாமூர்த்தி சுப்பிரமணியம் தேவாரம் திருஞானசம்பந்தன் வித்துவான் சுப்பையாபிள்ளை அவர்கள் முதலானோர் வீற்றிருந்தார்கள். மறுபுறத்தில் பிரதம விருந்தினராக வருகை தந்த நீதிபதி கே. வி. நவரத்தினம் அவர்கள் அமர்ந்திருந்தார். மண்டபம் நிறைய பல்துறைப் பட்டவர்கள் இருந்தனர். அங்கே வீற்றிருந்த அத்தனை பேரையும் வாழ்த்திய சீதாராமசாஸ்திரிகள், பழைய காலத்து முறையில் வேதமோதினர்கள். அவரோடு சேர்ந்தும், அவரைத் தொடர்ந்தும் குருகுலத்தார் பலவித சாகைகளை ஓதினர்கள். அவர்களைத் தொடர்ந்து ஓதுவார் மூர்த்திகள் திருமுறை ஓதினர்கள். தொழிலதிபரின் தாயார் மீனாட்சிப்பிள்ளை தம் கணவனர் கந்தையாவின் உருவப் படத்தைத் திரைநீக்கம் செய்தார்.

மண்டபத்தில் ஏழு கூட்டம் நாதஸ்வரக்குழுவினர் இனிமையாக வாசித்தார்கள். பத்மநாதன் குழுவினரும் கோவிந்தசாமி குழுவினரும் சந்தான கிருஷ்ணன் குழுவினரும் ஆறுமுகம் குழுவினரும் தமக்கு கைவந்த ராகங்களை ஆலாபனர் செய்து மண்டபத்தின் உள்ளேயும், வெளியேயும் இருந்தவர்களை மெய்மறக்கச் செய்தனர்.

அன்று மில்க்வைற் செய்தி பொன்விழாச் சிறப்பு மலராக வெளியிடப்பெற்றது. பண்டிதமணி கணபதிப்பிள்ளை ஐயா அவர்கள், செய்தி ஆசிரியர் குலரத்தினத்திற்கு ''பல்கலைப்புலவர்'' என்னும் கௌரவப் பட்டம் பொறித்த பொற்பதக்கம் சூட்டிப் பொன்னுடைபோர்த்திச் சிறப்பித்தார்.

மாலைநிகழ்ச்சிகள் மூன்று மணியளவில் ஆரம்பித்த போது தொழிலதிபர் தொழில் நிபுணரையும், தொழிலாளரையும் கௌரவித்தார். பொன்விழா மண்டபத்தை நிர்மாணம் செய்த முருகேசபிள்ளை அவர்களையும் ஓவியர் பெனடிக்அவர்களையும்கட்டட வேலை செய்தவர்களையும், மரவேலை செய்த ஆசாரியார் அவர்களையும் கௌரவித்தார்.

தொழிலதிபரின் மாலை நேர விருந்துபசாரத்தின்போது வேலணை உதவி அரசாங்க அதிபர் திரு சுப்பிரமணியம் சிறப்பு விருந்தினராய் அமர்ந்து மில்க்வைற் தொழிலதிபரின் தன்னலமற்ற சேவையைப் பாராட்டிப் பேசி வாழ்த்தினர்கள். யாழ் திவ்யஜீவன சங்கத்தார் கூட்டுப்பிரார்த்தனை நடத்தி மங்களம் பாடினர்கள்.

— ஓர் அன்பர்.

மனோஹரா (யாழ் நகர்)
தினசரி 4 காட்சிகள்
சிவாஜி கணேசன்-ஜெமினி கணேசன்
சுப்பையா - லக்ஷ்மி - நிர்மலா
நடிக்கும்
சுஜாதாவின்
உனக்காக நான்
(ஈஸ்ட்மன் கலர்)

ராணி (யாழ்ப்பாணம்)
ஜெய்சங்கர் - பத்மினி - லக்ஷ்மி
முத்துராமன் - நாகேஷ் - சச்சு
தினசரி காலை 10-30, பிற்பகல் 2-30, 6-30 9-30
தேவரின்
பெண் தெய்வம்

வெலிங்டன் (யாழ் நகர்)
தினசரி 4 காட்சிகள்
துணிவே துணை

லிடோ (யாழ். நகர்) எம். ஜி. ஆர். — லதா நடித்த
போன்: 7693
நீதிக்கு தலைவணங்கு

றியோ (யாழ்ப்பாணம்)
தினசரி 4 காட்சிகள்
மாலாசிங்க - சன்ஜே
தில்லகி
(ஹிந்தி)

பூலோஜி சினிமாஸ்
(பருத்தித்துறை)
தினசரி 2-30, 6-30, 9-30
எம். ஜி. ஆர்-லதா
உழைக்கும் கரங்கள்

நாகம்ஸ்
(சுன்னாகம்)
தினசரி 6-45, 10-00
சனி, ஞாயிறு பி. ப. 2-30
முத்துராமன்-சுஜாதா
வாழ்ந்து காட்டுகிறேன்

4-வது வாரம்
வெஸ்லி
(மானிப்பாய்)
தினசரி 2-30, 6-30, 9-30
எம். ஜி. ஆர்.
உலகம் சுற்றும் வாலிபன்
(கலர்)

ராஜா- யாழ்நகர்
ஐந்தாவது வெற்றி வாரம்!
தினசரி 10-30, 2-15, 6-15, 9-45
கே. எஸ். கோபாலகிருஷ்ணனின்
அற்புதப் படைப்பு!
ஜெமினி, ஜெயசித்திரா கே. ஆர். விஜயா
நடித்த
தசாவதாரம்
(கலர்)
(கண்ணபிரானின் பத்து அவதாரங்கள்)
[பாடசாலை மாணவர்கள் முன்கூட்டியே ஆசனங்களைப் பதிவுசெய்துகொள்ளலாம்]



யாழ். வின்ஸர் வெண் திரையில்
இன்று வெள்ளி முதல் குதூகல ஆரம்பம்
தென்னகத்தில் 100 நாட்களுக்கு மேல் ஓடிய வெற்றிச் சித்திரம்
தொடர்ந்து பாலசந்தரின் பல வெற்றிப் படங்களை அள்ளி வழங்கிய
யாழ். வின்ஸர் ஸ்தாபனத்தாரின்
மற்றுமோர் வெற்றிச் சித்திரம்
★ கமலஹாசன் ★ ரஜனிகாந்த்
★ எம். எஸ். விஸ்வநாத் ★ ஸ்ரீதேவி
★ ஒய். விஜயா ★ அநுபாமா
R. M. S. புரொடக்ஷன்ஸ் அளிக்கும்
K. பாலசந்தரின்
மூன்று முடிச்சு
தயாரிப்பு:
R. வெங்கட்ராமன்
R. M. சுப்பையா
இசையமைப்பு:
M. S. விஸ்வநாதன்
திரைக்கதை, வசனம், டைரக்ஷன் கே. பாலசந்தர்.


# வெளிநாட்டு நாணய மாற்று இவர்களுக்கு கிடைக்கும்

(கொழும்பு)

வெளி நாடுகளில் பட்டப் பின்படிப்பை மேற்கொள்ள விரும்புபவர்களுக்கு குறிப்பிட்ட அளவு வெளிநாடு நாணய மாற்று வழங்கப்படும் என்று நிதி, திட்டமிடல் அமைச்சர் திரு. ரொனி டி மெல் தெரிவித்தார்.

ஐக்கிய தேசியக் கட்சியின் முதலாவது 'பட்ஜட்' டை தேசிய அரசுப் பேரவையில் சமர்ப்பித்த பின்னர் நடத்திய பத்திரிகையாளர் மகாநாட்டில் பேசுகையிலேயே திரு. மெல் மேற்கண்டவாறு தெரிவித்தார். 'பீக்ஸ்', சீ. ஆர். ஏ திட்டங்களை ரத்துச் செய்தது குறித்து திரு மெல் கருத்துத் தெரிவிக்கையில், ஒரு நாட்டில் மூன்று நாணய மாற்று விகிதம் இருந்தால் அந்நாட்டின் பொருளாதாரம் சீர்கெட்டுவிடும் என்றார்.

உத்தியோகபூர்வ நாணய மாற்று, கள்ளச்சந்தை நாணய மாற்று, மூன்று நாணயமாற்று ஆகியவற்றினால் நாட்டின் பொருளாதாரம் அழியுமே ஒழிய அபிவிருத்தி அடைய மாட்டாது என்று திரு. மெல் கூறினார். [இ]

## பாராட்டும்

[4ம்பக்கத் தொடர்ச்சி]

செந்தில்நாதன் யாழ்ப்பாணம் பரி. யோவான் கல்லூரியில் நடைபெற்ற தமிழ்த்தின விழாவில் இளைப்பாறிய ஆசிரியர் திரு. கே. சுப்பிரமணியத்தின் சேவை நலம் பாராட்டில் பேசுகையில் குறிப்பிட்டார்.

கல்லூரி அதிபர் திரு செ. எ. ஆனந்தராசா பேசுகையில் ''மாணவர் மத்தியில் அமைதியின்மையும் கட்டுப்பாடுயின்மையும் தலைவர்களுக்கு மதிப்பளிக்கும் தன்மையும் குறைந்து காணப்படும் இக்காலத்தில் நீண்டகாலம் ஆசிரியராகப் பணியாற்றி இளைப்பாறிய ஆசிரியரின் சேவை நலத்தைப்பாராட்ட எடுத்திருக்கும் இம்முயற்சி பாராட்டுதற்குரியதாகும்'' என்றார்.

திரு. க. சுப்பிரமணியத்திற்கு ''தமிழ் வளர்த்த ஆசான்'' என்ற பட்டத்தைச் சூட்டி, பொன்னாடைபோர்த்தி அதிபர் கௌரவித்தார்.

திரு. க. சுப்பிரமணியம் நன்றி தெரிவித்துப் பேசுகையில் ''மாணவர்கள் தமிழை நன்கு கற்றுத் தேறவேண்டும். பணம் சம்பாதிக்கும் நோக்குடன் எழுதப்படும் நூல்களை விடுத்து நல்ல அறிவுக்குரிய நூல்களை கற்க வேண்டும்'' என்று கேட்டுக் கொண்டார். [உ]

## பெரும்...

(3-ம் பக்கத்தொடர்ச்சி)

சோஷலிஸ நாடுகளினதும் உதவி கிடைக்குமென்று அமைச்சர் கூறினார். ஆனால் சோஷலிஸ நாடுகள் எதற்கும் வரவு செலவுத் திட்டம் தயாரிப்பதற்குமுன் மேற்கொண்ட விஜயத்தின்போது அவர் போகவில்லை என்றார் திரு. தர்மலிங்கம். (ம)

## ரயிலில் மோதுண்டவர் மரணம்

'ரயிலால் மோதப்பட்டவர், அதேரயிலில் பழையபுகையிரத நிலையத்திற்கு கொண்டுசெல்லப்பட்டு, அங்கிருந்து காரில் யாழ்ப்பாணம் ஆஸ்பத்திரிக்கு கொண்டுவரப்பட்டு அங்கு மரணமானார்.

கொடிகாமத்தை சேர்ந்த க. வேலுப்பிள்ளையின் மரண விசாரணையில் மேற்கண்ட விபரம் தெரியவந்தது.

யாழ் மரணவிசாரணை அதிகாரி திரு. ஏ அமிர்தலிங்கம் மரணவிசாரணை நடத்தினார்.

கொடிகாமம் சந்தைக்கு அண்மையில் ரயில் பாதையை கடக்கும் போது ரயிலால் தூக்கி எறியப்பட்டார் என விசாரணையில் தெரியவந்தது. விபத்துமரணம் எனத் தீர்ப்பளிக்கப்பட்டது. (க)

## இளம்

(3ம் பக்கத் தொடர்ச்சி)

இரசிகமணி தற்கால படைப்பிலக்கியங்களை ஆராய்ந்து அவ்வப்போது எழுதியவர் ஆராய்ச்சிக் கட்டுரைகள் போல் இதுவரை இலங்கையில் எவருமே இத்துறையில் இவ்வளவில் செய்யவில்லை இளம் எழுத்தாளர்களை ஊக்குவிப்பதில் இவருக்கிணை இவரே இவரது இடத்தை ஈடுசெய்யக் கூடியவர்கள் இனிமேல்தான் ஈழத்தில் தோன்ற வேண்டும்.

இவ்வாறு யாழ். இலக்கிய வட்ட இணைச் செயலாளர்களில் ஒருவராகிய காரை செ. சுந்தரம்பிள்ளை தமது அநுதாபச் செய்தியில் தெரிவித்துள்ளார். (அ)


வியாபாரம் பெருக
விளம்பரம் செய்க

Regal (Jaffna)
French Film Festival
Daily at 4-45 7 & 9-30 P. M. only
WOMAN AT HER WINDOW
21-11-77 MONSIEUR PAPA
23-11-77 COUSIN COUSINE

சாந்தி (யாழ். நகர்)
போன்: 7642
தினசரி 10-30, 2-30, 6-30, 9-45
கே. பாலசந்தரின்
சொல்லத்தான் நினைக்கிறேன்
(புதியபிரதி)

ஸ்ரீதர் (யாழ்ப்பாணம்)
கடைசி வாரம்
தினசரி 10-30, 2-30, 6-30, 9-30
சிவகுமார்-சுஜாதா-ஸ்ரீகாந்த்
நடித்த
அன்னக்கிளி

### மணிவாக்கு

மற்றவர்களிடம் உதவி கேட்டுப் போகும் போது தன்சுதந்திரத்தை விற்பது போலாகிறது.

— காந்திமகான்.


# ஈழநாடு
The Eelanaadu


## பங்கீட்டுப் பொருட்கள்

இலவச அரிசி பங்கீட்டுச் சீனி ஆகியவை நிறுத்தப்படுவதற்கான வருமான எல்லையை முன்னூறு ரூபாயிலிருந்து ஐநூறு ரூபாய்வரை அதிகரிக்கும்படி ஆட்சிமன்றக்குழு கேட்டுள்ளதாகவும் இதை நிதியமைச்சர் மறுத்துள்ளதாகவும் செய்தி கூறுகிறது.

கட்சிக்கட்டுப்பாட்டையும் அரசின் திட்டத்தையும் பொறுத்தவரையும் நிதி அமைச்சர் இந்த மாற்றுயோசனையை மறுத்துள்ளது சரிதான்.

ஆனாலும் நாம் நேற்றுக் குறிப்பிட்டது போல முன்னூறு ரூபாய்க்கு மேற்பட்டவர்களென்றால் அறுநூறு ரூபாய் வருமானம் பெறுபவர்களின் நிலையையும் எண்ணிப்பார்க்கவேண்டும். நாளாந்தக் கூலி பெறுபவர்கள் கூட முன்னூறு ரூபாய்க்கும் அதிகமாகச் சம்பாதிக்கின்றார்கள். இவர்களுடைய நிலைமை என்ன?

முன்னூறு ரூபாய்க்கு மேலான வருமானம்பெறுபவர்கள் பற்றிய விபரங்களும் வேலையில்லாதவர்கள் பற்றிய விபரங்களும் விரைவில் திரட்டப்படவிருப்பதாகவும் செய்திகள் தெரிவிக்கின்றன.

எப்படித்தான் இந்த விபரங்கள் சேகரிக்கப்பட்டாலும் மோசடிக்காரர்களையும், கொள்ளையடிப்போரையும் முறியடிக்கப் போகிறோமென்று நிதியமைச்சர் சொன்னாலும் இது சுலபமான காரியமல்லவென்பது கடந்த காலங்களில் அனுபவபூர்வமாகக் கண்ட உண்மை.

எந்த அரசாங்கமும் நாட்டை முன்னேற்றுவதற்கான திட்டங்களையே கொண்டுவருவதாகக் கூறுவது உண்மையே.

இந்த அரசாங்கமும் இதைத்தான் சொல்கிறது. இதையே செய்ய முற்படுகிறது.

இதனால் எதிர்க்கட்சியினரும் மற்றும் மக்கள் தெரிவிக்கும் அபிப்பிராயத்தையும் பரிசீலனை செய்து நிவாரணமளிப்பதும் அரசாங்கத்தின் கடமையாகுமென்பதையும் சொல்லத்தான்வேண்டும்.

### மரம்...

(2-ம்பக்கத் தொடர்ச்சி)

கராசா ஆகியோர் சிறப்புரை நிகழ்த்தினார்கள்.

மரம் நாட்டு விழாவில் கலந்து கொண்ட பாடசாலைகளுக்கும் பொது மக்களுக்கும் கன்றுகள் மில்க்வைற் உரிமையாளர் திரு. க. கனகராசா இலவசமாக வழங்கினார்.

திரு. கனகராசா அவர்கள் முதலில் மரம் நாட்டி விழாவை ஆரம்பித்து வைத்தார்.

அச்சுவேலி ப. நோ. கூ. சங்க

## கொள்ளை வழக்கில் சட்டத்தரணிகள் வாதம்

(யாழ்ப்பாணம்)

அச்சுவேலிப் பலநோக்குக் கூட்டுறவுச் சங்கக்கொள்ளை வழக்கில் இருதரப்பு சட்டத்தரணிகளும் வாதம்நிகழ்த்திய பின்னர் நீதிபதி ஜனாப் எம். எம். அப்துல்காதர் எதிரிகளை தலா 50,000 ரூபா பிணையில் செல்ல அனுமதித்தார்.

எதிரிகளைப் பிணையில் விடுவதற்கான காரணங்களைக்காட்டி எதிரிகள் தனித்தனியே சத்தியக் கடுதாசி அணைத்திருந்தனர். எதிரிகளைப் பிணையில் விடக்கூடாதென்பதற்குக் காரணம் காட்டி அரச சட்டத்தரணி மூலம் சத்தியக்கடுதாசி அணைக்கப்பட்டிருந்தது.

இவ்வழக்கில் வல்வெட்டித்துறையைச் சேர்ந்த இளைஞர்களான நாராயணன் அருமைச்சந்திரன், கனகராசா ரமணகரன், தவராஜசிங்கம், உதயணன் ஆகியோர் அச்சுவேலிப் பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத்தில் இவ்வருடம் செப்டம்பர் மாதம் 12ம் திகதி சட்டவிரோதமாகக் கூட்டம் கூடி ப. நோ. கூ. சங்கக் காசாளரிடம் 40 ஆயிரம் ரூபா கொள்ளையடித்தாகவும், பொதுநோக்குடன் கொள்ளையடித்தாகவும் குற்றம்சாட்டப்பட்டிருந்தது.

எதிரிகள் சார்பில் ஆஜரான சட்டத்தரணிகள் ஆர். ஈ. தம்பிரத்தினம், எஸ். யோகநாதன் ஆகியோர் எதிரிகளைப் பிணையில் செல்ல அனுமதிக்குமாறு வாதித்தார்கள். அரச சட்டத்தரணி பி. சிவலோகநாதன் பிணையில் விடக்கூடாதென வாதித்தார்.

### தம்பிரத்தினம் வாதம்

சட்டத்தரணி ஆர். ஈ. தம்பிரத்தினம்:

''கொள்ளைச் சம்பவத்தில் எதிரிகளுக்குத் தொடர்புள்ளதென்பதற்கு ஆதாரமில்லை. கொள்ளை நடந்த இடத்தில் இரண்டரை மைல்களுக்கப்பால் அவர்கள் கைதுசெய்யப்பட்டனர். காரில் வந்ததாகவோ காரிலிருந்து இறங்கிப்போனதாகவோ சாட்சியம் கிடையாது. அவர்களிடம் பயங்கர ஆயுதம் கைப்பற்றப்படவில்லை. கொள்ளைப் பொருள்கள் அவர்களிடமிருந்து கைப்பற்றப்படவில்லை. அடையாள அணிவகுப்பிலும் அடையாளம் காட்டப்படவில்லை. ஆதலால் அவர்களைப் பிணையில் செல்ல அனுமதிக்குமாறு கேட்டுக்கொளகிறேன.

### அரசசட்டத்தரணி வாதம்

அரச சட்டத்தரணி பி. சிவலோகநாதன்:

''பொலிசாரின் சாட்சியம் வாக்குமூலமாக அமையவில்லை. கையும் மெய்யுமாக அதே இடத்தில் எதிரிகளைப் பொலிசாரும் இராணுவத்தினரும் துரத்திப் பிடித்துள்ளார்கள். பொலிசார் வாக்குமூலம் கொடுத்திருக்கமாட்டார்கள் தாங்கள் கண்டதைக்குறிப்பு எழுதியிருந்தார்கள். அந்தக் குறிப்பு எதிரிபக்கத்திற்குக் கொடுபடமாட்டாது. அந்தக் குறிப்பில் உள்ளவற்றை வெளிப்படையாக நான் இங்கு சொன்னால் எல்லாம் தெரிய வந்துவிடும். ஆதலால் அதைப் பற்றிக் கூறவில்லை.

''பொறுப்புள்ள உயர் உத்தியோகத்தரான இரகசியப் பொலிசார் சத்தியக்கடதாசி அணைத்திருக்கிறார். பகிரங்க வழக்குத் தொடுநர், அவரைக் கூப்பிட்டு விசாரணைசெய்து சத்தியக்கடதாசி தயாரித்து அணைக்கப்பட்டது. அவர்கள் பரிசீலனை செய்தபின் தான் சத்தியக்கடதாசி முடிக்கப்பட்டது. அதற்குப் பின்னால் கனவிஷயங்கள் அடங்கியிருக்கின்றது.

சட்டத்தரணி ஆர். ஈ. தம்பிரத்தினம்: ''கொள்ளை வழக்கில் எதிரிகளுக்குப் பிணை கொடுக்கலாம். இவர்கள் தலைமறைவாகி விடுவார்கள் என்பதுதான் பிணை கொடுக்கக்கூடாதென்பதற்குக் காரணமாக இருக்கிறது. அப்படியானால் பெருந் தொகையில் 25,000 ரூபா பிணையில் விடுவதுடன் ஒவ்வொரு வாரமும் பொலிசாரிடம் சென்று தங்கள் வரவைப் பதிவுசெய்து கொள்ளுமாறும் தெரிவித்தால் அவர்கள் தலைமறைவாவதைத தவிர்க்கலாம்.''

சட்டத்தரணி பி. சிவலோகநாதன்: ''எதிரிகளிடமிருந்து பணமும் காசோலையும் கைப்பற்றப்பட்டிருக்கிறன ''

சட்டத்தரணி ஆர் ஈ தம்பிரத்தினம்: ''அவர்கள் காரிலிருந்து இறங்கியதற்குச் சாட்சியமில்லை.''

சட்டத்தரணி பி. சிவலோகநாதன்: ''அது பற்றிப் பொலிசார் குறிப்பு எடுத்திருக்கிறார்கள்.''

சட்டத்தரணி எஸ். யோகநாதன்: ''2ம் எதிரி பரீட்சை எடுக்கவிருக்கிறார். அதற்குப் படிக்கவேண்டும். வெளியில் இருந்தால் படிப்பதற்குக் கூடுதல் வசதியாக இருக்கும்.''

சட்டத்தரணி ஆர். ஈ. தம்பிரத்தினம்: ''பொலிசார் எதிரிகளை இக்கொள்ளைச் சம்பவத்துடன் தொடர்புபடுத்தியிருக்கிறார்கள். இவர்களிடமிருந்து பணம் எடுக்கப்படவில்லை. தோட்டத்தில் பணம் கண்டெடுக்கப்பட்டது. அது யாருடையதென்று தெரியாது இவர்களிடமிருந்து பணம் மீட்கப்பட்டதென்பது உண்மையல்ல.''

சட்டத்தரணி எஸ். யோகநாதன்: ''எதிரிகள் விளக்கமறியலில் இருக்கிறார்கள். தினமும் கொள்ளைகள் நடந்துகொண்டிருக்கின்றன. இவர்களைப் பிணையில் செல்ல அனுமதிக்காமல் தொடர்ந்து விளக்கமறியலில் நீண்டகாலம் வைத்தால் அங்குள்ள குற்றவாளிகளுடன் பழகும் சந்தர்ப்பம் ஏற்பட்டு, அவர் வாழ்வு பாழாகிவிடும். இவர்களைப் பிணையில் செல்ல அனுமதிக்குமாறு கேட்டுக்கொள்கிறேன்.''

இரு பக்கத்து வாதங்களையும் கேட்ட பின்னர், நீதிபதி எதிரிகளைப் பிணையில் செல்ல அனுமதித்து, விசாரணையை இம்மாதம் 28ந் தேதிக்கு ஒத்திவைத்தார். (க-அ).

## வெளிநாட்டு நாணய மதிப்பு

நிதியமைச்சு அறிவித்துள்ள புதிய வெளிநாட்டு நாணயங்களுக்கான இலங்கை ரூபாவின் பெறுமதி விபரம் வருமாறு:

கடந்த செவ்வாய்க்கிழமை நள்ளிரவு முதல் இது அமுலுக்கு வந்துள்ளது:

| நாடு | நாணயம் | இலங்கை ரூபா |
|---|---|---|
| ஐக்கிய இராசிச்சியம் | பவுண் | 29.06 |
| சிங்கப்பூர் | டாலர் | 6.67 |
| ஐக்கிய அமெரிக்கா | டாலர் | 16.00 |
| இந்தியா | ரூபா | 1.84 |
| ஆஸ்திரேலியா | டாலர் | 18.01 |
| கனடா | டாலர் | 14.40 |
| டென்மார்க் | குரோன் | 2.61 |
| மேற்கு ஜெர்மன் | மார்க் | 7.13 |
| பிரான்ஸ் | பிராங் | 3.29 |
| ஹொங்கொங் | டாலர் | 3.41 |
| இத்தாலி | லிரா | 0.02 |
| ஜப்பான் | யென் | 0.07 |
| மலேஷியா | றிங்கிற் | 6.67 |
| பாகிஸ்தான் | ரூபா | 1.62 |
| நெதர்லாந்து | கில்டர் | 6.59 |
| நோர்வே | குரோன் | 2 93 |
| தென்னாபிரிக்கா | ராண்ட் | 18.39 |
| சுவீடன் | குரோனு | 3 33 |
| சுவிற்சலாந்து | பிராங் | 7.25 |

யாழ். மாவட்ட பாடசாலைகளின்

## ''சங்கீத, நடன, நாடகப் போட்டி நாளை நடைபெறும்

(யாழ்ப்பாணம்)

யாழ் மாவட்ட பாடசாலைக்கிடையிலான சங்கீத நடன, நாடகப்போட்டி யாழ்ப்பாணம் இந்து மகளிர் கல்லூரி மண்டபத்தில் நாளை நடைபெறவிருக்கிறது.

யாழ். மாவட்டத்திலுள்ள 12 கல்வி வட்டாரப் பிரிவுகளைச் சேர்ந்த 53 பாடசாலைகள் இப்போட்டியில் கலந்துகொள்ளும்.

இப்போட்டியில் 50 பாட்டுக்களும், 25 நடனங்களும், 18 நாடகங்களும் இடம்பெறும். 7 மத்தியஸ்தர் குழுக்கள் முன்னிலையில் இந்நிகழ்ச்சிகள் இடம்பெறும்.

இப்போட்டியில் தெரிவு செய்யப்படும் பாடசாலைகள் கொழும்பில் நடைபெறும் போட்டியில் பங்குபற்றும்.

இப்போட்டி நாளைக் காலை 9 மணிக்கு ஆரம்பமாகி மாலை 6 மணி வரை நடைபெறும்.

கல்வி அமைச்சின் பணிப்பின்பேரில் யாழ் கல்விக்கந்தோர் இப்போட்டியை நடத்துகின்றது. (க)

### 5 பேர் உள்ள...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

கணக்கில் எடுத்துக்கொள்ளப்படமாட்டாது.

இதுபற்றிய விபரங்களைப் பெறுவதற்கு விரைவில் படிவங்கள் வீடுகளுக்கு வழங்கப்படும்.

9 வயதுக்குட்பட்டவர்களுக்கு குழந்தைகள் கூப்பன்களும் 12 வயதுக்குட்பட்டவர்களுக்கு பிள்ளைகள் கூப்பன்களும் விரைவில் வழங்கப்படவிருக்கின்றன.

புதிய பங்கீட்டுத் திட்டம் அடுத்தவருடம் ஜனவரி முதலாம் திகதி அமுலுக்குவரும்.

### இந்திய...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

#### எம். ஜி. ஆருக்கும் தந்தி

தமிழ் நாட்டில் ஏற்பட்டுள்ள வெள்ள அபாயம் குறித்தும், பலர் உயிரிழக்க நேர்ந்தள்ளது குறித்தும் இலங்கை தமிழ் மக்களின் கவலையைத் தெரிவிக்கும் தந்தியொன்றை திரு. அமிர்தலிங்கம் தமிழ் நாடு முதலமைச்சர் திரு. எம். ஜி. ராமச்சந்திரனுக்கு அனுப்பியுள்ளார். [ம]

## நாடும் நடப்பும்

குட்பைகூளங்களையும் எருவையும் சேர்த்துவைத்தால் அது அருமையான இயற்கைப் பசளை. சில வருடங்களுக்கு முன்னர் நிலபுலம் இல்லாதவர்களும் கூட இப்படிக் குப்பை கூளங்களைத் தனியாக அல்லது எருவுடன் சேர்த்து வைத்திருப்பர் தோட்டக்காரர்கள் இடையிடையே வந்து இவற்றை விலைக்கு வாங்கிச்செல்வர். இதனால் வீடு வளவுகளும் சுத்தமாக இருந்தன; வீதிகளும் சுத்தமாக இருந்தன.

இப்போது ரசாயன உரம் பாவனைக்கு வந்துவிட்டதால் இயற்கைப்பசளையில் அக்கறை குறைந்துவிட்டது.

இதுமட்டுமல்ல, ஒரு மழை விழுந்துவிட்டால்போதும். வளவிலுள்ள மரங்களை வெட்டியும் கத்தரித்தும் வீதியில் கொண்டுவந்து குவித்துவிடுகிறார்கள்.

யாழ்ப்பாண மாநகரசபையில் இப்போது பத்து லொறிகள் பாவனையிலிருக்கின்றன. எந்தநாளும் குட்பைகள் அள்ளியவண்ணமே இருக்கின்றன. ஆனால் குப்பைகள் பெருகிக் கொண்டே இருக்கின்றன.

குப்பை போடுவதிலும் கூட சில இடங்களில் வேடிக்கை பார்க்கலாம். தங்கள் வீட்டுக் குட்பைகளை அடுத்த வீட்டு வாசலுக்கருகில் குவித்துவிடுபவர்களும் உள்ளனர். லொறி வந்து குப்பையை எடுத்துச் சென்ற மறுகணமே குப்பையைக் கொண்டுவந்து குவிப்பவர்களும் உள்ளனர்.

இலை குழைகளை வீட்டு வளவுக்குள் புதைத்தால் மரம் செடிகொடி வளர்வதற்கு நல்ல பசளையாக இருக்கும். வீதியைப் பழுதாக்காமல் வளவுள்ளவர்கள் இதைச் செய்தாலென்ன?

மழை வந்தால் இப்பகுதிகளிலுள்ள வீதிகள் குண்டும் குழியுமாகிவிடுகின்றன. யாழ்ப்பாண நகரில் மட்டுமல்ல இதர பகுதிகளிலும் இப்படித்தான். மாநகரசபை, நகரசபைகளின் பராமரிப்பிலுள்ள சிறிய வீதிகள் ஒழுங்கைகள் மட்டுமல்ல மராமத்து இலாகா என்றிருந்து இப்போது பிரதேச பொதுப் பொறியியற்பகுதியின் பராமரிப்பிலுள்ள பிரதான வீதிகளும் இதே மோசமான நிலையில் தானுள்ளன.

இதற்கு என்ன காரணம். இப்பகுதிகளில் வீதிக்குப் பாவிக்கப்படும் கற்கள் விரைவாக நொறுங்கிவிடுகின்றன. தென்னிலங்கையில் மலைப் பாறைகளில் உடைத்தெடுக்கப்படும் கருங்கற்கள் வீதிக்கு உபயோகிக்கப்படுகின்றன. இதனால் அந்த வீதிகள் உறுதியாக இருக்கின்றன.

யாழ்ப்பாண நகரில் ஒரு வீதிக்குப் பரீட்சார்த்தமாக கருங்கல் எடுத்துப்போடுவது பற்றி யாழ். நகர விசேஷ ஆணையாளர் திரு. க. சிவஞானம் ஆலோசனைசெய்து வருகிறார். வவுனியாதான் கருங்கல்லு பெறக்கூடிய சமீபத்திலுள்ள இடம். ஏற்றி இறக்குவதில் எவ்வளவு செலவு போகுமோ?

யாழ். முனீஸ்வரன் வீதிக்கும் விரைவில் நல்லகாலம் பிறக்குமென்று அறிகிறேன்.

— ஊர்சுற்றி

இப்பத்திரிகை 'ஈழநாடு' லிமிட்டெட் இதாபனத்தாரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதி 68-ம் இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1977-ம் ஆண்டு நவம்பர் மாதம் 18 ந் திகதிஅச்சிட்டு வெளியிடப்பட்டது.

The Eelanaadu, Post Box No. 49, Jaffna. Telegram Eelanaadu Telephone 389, Registerd as News paper in Sri Lanka